(அ) மடிப்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து கடற்கரை சாலை வழியாக தலைமைச் செயலகத்திற்கு நகரப் பேருந்து விடப்படுமா?

(ஆ) மடிப்பாக்கம் கூட்டு ரோட்டுடன் திரும்பும் பேருந்துகள் மடிப்பாக்கம் பேருந்து நிலையம் வந்து திரும்புமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது மடிப்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தலைமைச் செயலகத்திற்கு கடற்கரைச்சாலை வழியாக பேருந்து இயக்குவது பற்றிய குறிப்பு பரிசீலனையில் இல்லை. எனினும் தற்போது மடிப்பாக்கத்திலிருந்து அண்ணா சதுக்கத்திற்கு காலையிலும், அவ்வாறே தலைமைச் செயலகத்திலிருந்து மடிப்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு மாலையிலும் ஒரு பயணத் தடம் எண் 45ஏ—இல் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இயலாது. சைதாப்பேட்டையிலிருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படுகிற தடம் எண் 51 எஸ்—இல் சில பயணத் தடவைகள் சைதாப்பேட்டையிலிருந்தும், செயின்ட் தாமஸ் மவுண்டிலிருந்தும் மடிப்பாக்கம் கூட்டுசாலைக்கு இடைப்பட்ட பயணிகள் கஷ்டத்தைச் சமாளிப்பதற்காக இயக்கப்படுகிறது. இது நீடிக்கப்பட்டால் தற்போது பெருமளவில் பயன்படுத்தும் தினசரி செல்லும் பயணிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதால் இந்தக் கோரிக்கையை ஏற்க இயலவில்லை.

தெரு விளக்குகள் பராமரிப்பு.

*1709 திரு. வீ. தமிழ்மணி, திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தெரு விளக்குகளை மின்சார வாரியமே பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) அதற்காக மின் இலாக்காவிற்கு மான்யம் கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 20]

9.30 மணி

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் ஏற்கனவே இதுபோன்ற முறையில் மின்சார வாரியத்தில் பராமரிக்கப்பட்டு வந்ததால் கிராமங்களில் தெரு விளக்குகள் சீரான முறையில் எரிந்து வந்தது. ஆனால் இன்றைக்கு அந்தப்பொறுப்பு ஊராட்சிகளிடத்திலே ஒப்படைக்கப் பட்டதால் பெரும்பாலான ஊராட்சிகளில் பணம் இல்லாத காரணத்தினால் விளக்குகள் மாற்றுகிற பணி நடைபெறாமல் இருக்கின்றன. எனவே கிராமங்கள் வெளிச்சம் பெறுவதற்கு இந்த அரசு மீண்டும் மின் வாரியத்திடமே அந்தப் பொறுப்பை ஒப்படைத்து ஒரு ஆண்டுக்கு ஒரு கம்பத்தில் ஒரு விளக்குதான் பொருத்த வேண்டுமென்று இருக்கின்ற அந்த நியதியை மாற்றி ஒரு கம்பத்தில் ஒரு ஆண்டு இரண்டு முறையாவது விளக்குகளை மாற்றலாம் என்று சட்டம் போட முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து ஆண்டுக்கு ஆண்டு மாறி மாறி மனுக்கள் வரப்பட்டு, அது பரிசீலிக்கப்பட்டு அதிலே பல குறைகள் சொல்லப்பட்டு மீண்டும் ஊராட்சி மன்றங் களுக்கு அந்த உரிமை வழங்கப்பட வேண்டும் என்று உறுதி யளிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல சில இடங்களில் ஏதாவது சிக்கல், பணத் தகராறு இருக்குமானால் கூடுமானவரையில் ஊராட்சி ஒன்றியங்கள் அதிலே கவனம் செலுத்தி விளக்கு எரியாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் ஏதாவது இருந்தால் தடுத்து நிறுத்தி அந்த விளக்குகளை எரிய வைக்க முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள உத்தரவுப்படி ஊராட்சி மன்றத் தலைவர் பல்புகளை வாங்கி வைத்திருக்கவேண்டும். அந்தக் குறிப்பிட்ட நாளில் மட்டும்தான் ஓயர்மேன் வருவார். குறிப்பிட்ட திங்கட்கிழமை என்றால் ஊராட்சித் தலைவர் இல்லை என்றால் அடுத்த திங்கட்கிழமைதான் வருவார் என்று பல நடைமுறைகள் ஒத்துவராத சிக்கல்கள் இருக்கின்றன. அதோடு அந்த இடத்திலேயே ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும். அப்படி இல்லாவட்டால் அந்த ஒயர்மேன் பல்பு போட மாட்டார் என்ற நிலைமையில் பல இடங்களில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் பல்பு வாங்கி வைத்திருந்தாலும்கூட ஒயர்மேன் காலாகாலத்தில் வந்து போடுவதில்லை. அதனால் நடை முறையில் நிறைய தகராறுகள் இருக்கின்றன. அதோடு சில ஊராட்சி மன்றங்களில் பணம் அறவே இல்லை. ஆகையால்

அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்கள் பல்பு வாங்கி வைத்து இருப்பது என்பது முடியாத காரியம். பொது நிதியும் ஊராட்சி ஒன்றியத்தில் இல்லாதபோது பல கிராமங்கள் இருண்ட நிலையில் இருக்கின்றன. ஆகவே முன் இருந்த முறைப்படி இந்த மின் வாரியத்திலேயே தெருவிளக்கு பராமரிப்பை ஏற்றுக்கொள்வதுதான் சிறந்தது. அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நேரத்திலேகூட பணம் செலுத்தாது இருந்ததற்குப் பல ஊராட்சிகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. தற்போதுகூட மின் இணைப்புகள் கொடுத்து அதற்குக் கட்டணம் செலுத்தாத காரணத்தினால் சில பேரூராட்சிகளில் இருந்துகூட துண்டிக்கப்பட்டு இருப்பதாகவும், அவைகள் எரிவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அதற்கான புகார்கள் என்னிடத்திலே வந்திருக்கிறது. இதையெல்லாம் உத்தேசித்து இருக்கிறோம். இன்று லைன் மேல போடுவது பற்றிய விஷயத்தைக் குறிப்பிட்டுக் சொன்னார்கள். அது உண்மையிலேயே நியாயமானதுதான். தற்போது அதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதை எப்படி செய்யலாம் என்பது பற்றி முடிவெடுப்பது அவசரப்பட்டு முடிவெடுக்கமுடியாது என்பதால் சற்றுக் காலதாமதம் ஆகலாம் என்பதைத் தெரிவித்துச்சொல்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெருவிளக்குகள் பராமரிக்கின்ற பொறுப்பு உள்ளாட்சித் துறைக்கு வழங்கப்பட்டு இருந்தாலும் புதிய மின் இணைப்பு பொருத்துவதில் உள்ளாட்சித் துறை மின் வாரியத்தை அணுகுகிறபோது ஒரு மின் கோட்டத்திற்குட்பட்டிருக்கின்ற பகுதியில் 275 விளக்குகள் மட்டுமே புதிய விளக்குகளுக்கு இணைப்புகள் கொடுக்கமுடியும் என்ற நிபந்தனை இருக்கின்ற காரணத்தினால் திருப்பூர் போன்ற தொழில் துறையிலே வேகமாக வளருகின்ற நகரங்களில் தெரு விளக்குகள் உரிய முறையிலே போட முடியாமல் நகராட்சியில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றி, 2500 தெரு விளக்குகள் வரை தீர்மானிக்கப்பட்டும் போடமுடியாமல் இருக்கின்றது. ஆகவே சில நகரங்களுடைய தேவையையொட்டி இந்த நிபந்தனை தளர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அந்த நகராட்சியினுடைய பிரச்சினைபற்றி தனியாக எழுதிக் கொடுத்தால் சம்பந்தப்பட்ட துறையுடன் கலந்தாலோசித்து விரைவாக முடிவு எடுக்கப்படும். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 மார்ச் 20]

திரு. செங்கைசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் சென்னை மாநகராட்சியில் 35,000 தெருவிளக்குகளுக்கு மேல் இருந்தன. இன்றைய தினம் 50,000 தெருவிளக்குகளுக்கு மேற்பட்டவை பொருத்தப்பட்டு இருந்தாலுங்கூட அவைகள் கேபிள் பழுதடைந்து இருக்கும் காரணத்தினால் பெரும்பாலான தெரு விளக்குகள் எரியவில்லை. கடந்த காலத்தில் 2 ஆயிரம் பேர்கள் பணியாளர்கள் இருந்தார்கள். தற்போது 800 பேர்தான் இருக்கின்றார்கள். ஓய்வு பெற்றதாலே, இப்போது 800 பேர் தான் சென்னையிலே இருக்கின்றார்கள். அதனாலே பராமரிக்க முடியவில்லை. ஆக சென்னையிலே 50 விழுக்காட்டுக்கு மேல் தெருவிளக்குகள் எரியாமல் இருக்கின்றன. எனவே அரசு இதிலே தலையிட்டு சென்னைக்கு ஒளி தரமுடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கு தெரு விளக்கு எரிய வைப்பது பற்றியதாகும். தனிக் கேள்வி போடவும்,

திரு டி. சி. விஜயேந்திரையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பஞ்சாயத்துக்களில் மின் விளக்குகள் சம்பந்தப்பட்ட பணிகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே நானும் ஒரு பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறேன். நான் எவ்வளவு முறை எலெக்ட்ரிசிட்டி டிப்பார்ட் மெண்டை கேட்டுக்கொண்டாலும், அவர்கள் அனுப்பும் ஆட்கள் சரியாக வேலை செய்வதில்லை. என்னுடைய தொகுதி பூராவிலும் இந்த மாதிரி நிலைமைதான் இருக்கிறது. நான் பல பகுதிகளை ஏற்கெனவே சுற்றிப் பார்த்திருக்கிறேன். எனவே, ஏற்கெனவே இருந்தபடி அவர்களுக்கே, எலெக்ட்ரிசிட்டி டிப்பார்ட்மென்டுக்கே கொடுத்துவிட்டால் அதனால் பஞ்சாயத்துக்கும் நஷ்டம் ஏற்படாது, மக்களுக்குக் குறைகளும் அதிகம் இராது. ஆகவே, இப்பணி எலெக்ட்ரிசிட்டி டிப்பார்ட் மெண்டிடமே ஒப்படைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்டேன். ஏற்கெனவே ஒருமுறை இப்படி சொல்லப்பட்டது. பிறகு மாற்றி சொல்லப்பட்டு, பரிசீலித்துதான் இந்த முடிவுக்கு வரப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் இப்படிப்பட்ட நிலையில், தனக்கு இருக்கிற நிலையை விளக்கி, அவர்களுடைய நிதிநிலைக்கு ஏற்ப, உபகரணங்கள் இருப்பிற்கு ஏற்ப அவர்கள் அந்தப் பணியை வந்து கவனிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது

என்று பல ஊராட்சி மன்றங்கள் முறையிட்டதன்பேரில்தான் அது இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. எனவே, இதை அவசரப்பட்டு மாற்றுவதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. தயாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களில் சோடியம் மின் விளக்கு களைப் பொருத்திக்கொள்ள அனுமதி இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட அனுமதி நகராட்சிகளுக்குக் கிடையாது. ஆகவே நகராட்சிகளிலும் சோடியம் மின் விளக்குகளைப் பொருத்திக் கொள்ள அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து இதில் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள் நிதிநிலையை மனதில் கொண்டு, ஏற்கெனவே உள்ள படிப்பினையையும் அனுபவத்தையும் மனதில் கொண்டு, தற்போது நான் அறிந்தவரையில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் இந்த மின்சார பல்புகளை போடுவது, மாற்றுவது போன்ற வேலைகளை மின்சார வாரியமே செய்ய வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கைகள் அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். அப்படி ஏதாவது கோரிக்கைகள் அரசுக்கு வந்திருக் கிறதா அப்படி வந்திருப்பின், அப்படி செய்வதன்மூலம ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து, பொதுநிதியிலிருந்து, மின்சார வாரியத்திற்கு பணத்தை கட்ட முடியும், பணிப் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்கு மின்சார வாரியமே செய்வதுதான ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுவதாக இருக்கும். ஆகவே, அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன் அடிப்படையில்தான் நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். ஒருசில ஊராட்சி ஒன்றி யங்கள் அப்படி ஏதாவது மின் விளக்குகள் எரிவதற்குரிய கட்டணம் கட்டுவதற்கு தகுதி இல்லாமல் இருக்கிற நேரங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் தலையிட்டு அதைச் செய்து முடிப்பதற்கு வாய்ப்பு தரலாம்—இப்படி இருந்தால்—என்பதற்காகத்தான் இதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொண்டிருக்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையில், டைரக்டர் ஜெனரல் ஆப் சப்ளைஸ் அன்ட் டிஸ்போசல் அவர்களின் நார்ம்சை

ஒத்துக்கொண்டுதான் பல்புகள் வாங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதுபோல ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு ஆண்டுக்கும் எவ்வளவு தேவை என்று தோராயமாகக் கண்டறிந்து, அப்படி வாங்குகிற பல்புகளில் எல்லாம் உள்ளாட்சித் துறை என்றும், அதிலே வண்ணம் பூசி குறிப்பாக சதர்ன் ரெயில்வேயில் 'எஸ்.ஆர்.' என்று சுருக்கமாகப் போடுவதுபோல, அப்படிப்பட்ட அடையாளம் பல்புகளில் போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலிருந்து, ஏப்ரல் 1லிருந்து அப்படிப்பட்ட நிலைமைகளை புதிதாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாமா என்பது பற்றி நம்முடைய துறையின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூகக் கூடம் கட்டுதல்

*3482 திருமதி எஸ். பி. சற்குணம்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் 21-வது வட்டம் டிரைவர்கள் காலனி பகுதியில் சமூகக் கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 21வது வட்டத்தில் ஆதி திராவிட மக்கள் அதிகம் வசித்து பேர் வருகிறார்கள். அவர்கள் இல்லத்தில் நடைபெறும் விழாக்களுக்கு வெகு தொலைவில் இருக்கிற மண்டபங்களை நாடிச் செல்வது சிரமமாக இருக்கிறது. வெளி இடங்களிலுள்ள மண்டபங்களில் அவர்கள் விழாக்களை நடத்துவதற்கும், அதிக வாடகை கொடுப்பதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, சமூக நலக் கூடம் அங்கே அவசியம் தேவைப்படுகிறது. அடுத்தக் கட்டத்திலாவது அங்கே சமூக நலக் கூடம் கட்டுவதற்குரிய பரிசீலனை மேற்கொள்ளப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS